NP/15/MA/GEN-08

10.05.2007

சுற்றறிக்கை இல : **02/2007**

சகல கூ.அ.உ.ஆணையாளர்களுக்கும்,

***களவு மற்றும் வன்செயல் நடவடிக்கைகளால் ஏற்பட்ட பொருட்குறைவை கழித்து எழுதுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பித்தல்***

---

மேற்படி விடயம் தொடர்பான 2006.05.05ந் திகதிய 03/2006 இலக்க சுற்றறிக்கை சார்பாக.

களவு மற்றும் வன்செயல் நடவடிக்கைகளால் ஏற்பட்ட பொருட்குறைவை கழித்து எழுதுவதற்கு தங்களால் சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பங்களுடன் கீழ்வரும் ஆவணங்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்படல் அவசியமானதாகும்.

1. பொலிஸ் முறைப்பாடு, பொலிஸ் அறிக்கை இவை இரண்டும் பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து கிளை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய கிராம சேவகரிடம் செய்யப்பட்ட முறைப்பாடு பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு தங்களால் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
2. கழித்து எழுதுதல் தொடர்பாக கிளைப்பொதுச்சபை, கழிவு உபசபை, இயக்குனர் சபை, பொதுச்சபை, தீர்மானங்கள்.
3. கணக்காளர், பொதுமுகாமையாளர், அச்சங்கத்துக்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்கறிக்கை (கழித்து எழுதும் தொகையை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.)

மேற்படி ஆவணங்கள் இணைக்கப்படாமல் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் யாவும் மீண்டும் தங்களுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

ஆ.சுப்பிரமணியசர்மா,
அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும். (வ.மா)

சிம.